செ.வெ.எண்.19 நாள்:19.05.2020

# நீலகிரி மாவட்டம் கூடலூர் கோட்டதித்திற்குட்பட்ட பழங்குடியின மக்களுக்கு கொரோனா நிவாரண பொருட்களை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட திவ்யா இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

**************

நீலகிரி மாவட்டம் கூடலூர் கோட்டத்திற்குட்பட்ட தேவர்சோலை பேரூராட்சி கவுண்டன்கொல்லி மற்றும் மசினக்குடி ஊராட்சி ஆணைகட்டி ஆகிய மலைவாழ் குடியிருப்பு பகுதிகளில் வசிக்கும் பழங்குடியின மக்களுக்கு கொரோனா நிவாரண பொருட்கள் வழங்கும் நிகழ்வு இன்று (19.05.2020) நடைபெற்றது. இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட திவ்யா இ.ஆ.ப., அவர்கள் 240 பழங்குடியின மக்களுக்கு கொரோனா நிவாரணப் பொருட்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் கூடலூர் வருவாய் கோட்டாட்சியர் திரு.ராஜ்குமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சிறுசேமிப்பு) திரு.நாசர் செரீப், கூடலூர் வாட்டாட்சியர் திருமதி.சங்கீதா இராணி ஆகியோர் கலந்து கொண்டனர்.

**தொடர்ந்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவிக்கையில்,**

நீலகிரி மாவட்டத்தில் கொரோனா தொற்று முற்றிலும் கட்டுப்படுத்தப்பட்ட கடந்த ஒரு வாரங்களுக்கு மேலாக புதிய கோரானா தொற்று இல்லை என்ற நிலை தொடர்கின்றது. இந்நிலையில் மாவட்ட நிர்வாகம் கொரோனா தொற்று தடுப்பு பணிகளில் கவனம் செலுத்தி வரும் அதே வேளையில், ஊராடங்கால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையில் சிறப்பு நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றது.

ஊரடங்கு அமல்படுத்தப்பட்டு போது போக்குவரத்து முற்றிலும் முடக்கப்பட்டுள்ள நிலையில் எல்லையோர கிராமங்களில் வசிக்கும் பழங்குடியின மக்களுக்கு அத்தியாவசிய மளிகை பொருட்கள் அடங்கிய தொகுப்பும், காய்கறித் தொகுப்பும் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி இன்று தேவர்சோலை பேரூராட்சி கவுண்டனக்கொல்லி கிராமத்தில் 123பழங்குடியின மலைவாழ் மக்களுக்கும், மசினக்குடி ஊராட்சி ஆணைகட்டி கிராமத்தில் 117

பழங்குடியின மலைவாழ் மக்களுக்கும் 15கிலோ அரிசி, 1கிலோ துவரம்பருப்பு, 1லிட்டர் சமையல் எண்ணெய், அடங்கிய மளிகை தொகுப்பும், காய்கறித் தொகுப்பும் வழங்கப்பட்டது. இதுபோல் முற்றிலும் நகரத்தொடர்பின்றி தொலைதூர மலைகிராமங்களில் வசிக்கும் மக்களுக்கு அடிப்படை அத்தியாவசிய பொருட்களை அவர்களின் குடியிருப்புகளுக்கு அருகாமையிலேயே சென்று வழங்குவதன் மூலம் அவர்கள் ஊரடங்கு காலத்திலும் உணவுத்தேவையினை பூர்த்தி செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மாவட்ட நிர்வாகம் பொதுமக்களின் சிரமங்களை களையும் வகையில் பல்வேறு சிறப்பு நடவடிக்கைகளை எடுத்து வரும் நிலையில் பொதுமக்கள் மாவட்ட நிர்வாகத்தின் அறிவுரைகளை பின்பற்றி, தனிமனித சுகாதாரத்தில் கவனம் செலுத்தி தங்களை தாங்களே காத்துக்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப, அவர்கள் தெரிவித்தார்.

தொடர்ந்து பிரதம மந்திரி ஆவாஸ் யேஜனா அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தின் மூலம் கவுண்டன் கொல்லி பகுதியில் 87பயனாளிகளுக்கும், குட்டமங்களம் பகுதிகயில் 10 பயனாளிகளுக்கும் தலா ரூ.2.10 இலட்சம் மதிப்பில் வீடுகள் கட்டும் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு பணிகளை விரைந்து முடிக்க அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நீலகிரி மாவட்டம்.**